**பிப்ரவரி - 5**

**"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." - 1தெச 4 : 3**

தேவனுடைய சித்தத்தைத் தெரிந்துகொள்ள வேதகாமத்தண்டைக்கு வரும்போது, தேவன் நம்மிடத்தில் கேட்கும் பெரிய வேலை மற்றவர்களுக்காகச் செய்ய வேண்டிய வேலை அல்ல என்றும், ஆனால் அது தன்னையே அடக்கி வென்று ஆளும், நம்மில் செய்யப்பட வேண்டிய வேலை என்றும் கண்டு கொள்ளுகிறோம். ஆகையால் மற்றதெல்லாம் அதாவது, விசுவாச வீட்டாருக்கு நாம் செய்கிற ஊழியமும், எல்லா மனிதருக்கும், சுதேச வெளிநாட்டு ஸ்தாபனங்களினால் நாம் நன்மை செய்கிறதுமாகிய இவை எல்லாம் நமக்குள்ளே செய்யப்பட இருக்கிற மிகவும் முக்கியமான வேலைக்குத் துணையானவைகள். ஏனென்றால், அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு சொல்லுகிறதுபோல், கிறிஸ்துவின் ஆவியும், பிதாவின் ஆவியுமான அன்பு நமது ஜீவியத்தின் ஆளும் தத்துவமாக நம்மில் அபிவிருத்தி செய்யப்படாதிருந்தால், நாம் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்வன்மையால் பிரசங்கித்தாலும், நமது ஆஸ்திகளை எல்லாம் ஏழைகளுக்கு போஜனம் கொடுப்பதற்காகக் கொடுத்தாலும், ஒரு நல்ல காரணத்திற்காக உயிர்த்தியாகம் செய்தாலும், தெய்வீகத் தீர்ப்பின்படி நாம் ஒன்றுமில்லை. **- Z '99, 4 (R 2411).**

பரிசுத்தமாக்கப்படுதல் என்றால், தன்னுடைய சுயநலத்தினின்றும், உலகத்தனத்தினின்றும் பிரிந்து, தேவனுடைய ஊழியத்திற்குத் தன்னை பிரதிஷ்டை செய்வதாகும். இதன் முழு கிரியையும் நமது பரமபிதாவின் குணத்திற்கு ஒப்பான ஒரு குணத்தை நம்மில் அபிவிருத்தி செய்யும் தேவனைப் போலொத்த குணத்தின் அபிவிருத்தி, தனது பிள்ளைகளுக்கு இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இதற்கு கொஞ்சமும் குறைவானதை அல்ல, யார் தெரிந்து கொள்ளுதலின் அழைப்பின் காலத்தில் தன்னை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புவிக்கிறார்களோ, அவர்கள் முடிவாய் ஆவி ஜீவியின் நிலையில் தேவனைப் போலிருப்பான். அப்பொழுது கிறிஸ்துவின் மத்தியஸ்த ஆட்சியில் இந்த விதமாக ஒப்புக் கொடுத்தல், பூரண மனுஷீக ஜீவனால் பலனளிக்கப்படும்.

**- P '36, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

லேவி 20:7,8; மீகா 6:8; யோவா 17:17; அப் 20:32; 2கொரி 1:2,30; 6:11; எபே 5:10,26,27; 1தெச 5:23; 2தெச 2:13; தீத்து 3:5,6; எபி 2:10; 10:10,14;13:12; 1பேது 1:22; யூதா 1.

**கோபுர வாசிப்பு : Z '16, 99 (R 5876).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எனது பரிசுத்தமாக்கும் அனுபவங்கள் எவை? அவற்றின் மத்தியில் எவ்வாறு நடந்துகொண்டேன்? அவற்றிலிருந்து என்ன நன்மை அடைந்தேன்?